**கொழும்புப் பல்கலைக்கழகம், இலங்கை**

**சட்ட பீடம்**

**சட்டமாணித் தேர்வு, ஆண்டு – III, 2019**

# சான்றுச் சட்டமும் குற்றவியல் நடபடிமுறையும்

(மூன்று மணித்தியாலம்)

வினாக்களின் மொத்த எண்ணிக்கை: 07

எவையேனும் **நான்கு** வினாக்களுக்கு **மட்டும்** விடை தருக.

(தெளிவற்ற கையெழுத்துக்குப் புள்ளிகள் குறைக்கப்படும்.)

1. ராஜா என்பவன் அவனது கொழும்பு மாடிவீட்டில் கத்திக்குத்துக் காயங்கள் பலவற்றுடன் இறந்து கிடக்கக் காணப்பட்டான். பின்வரும் நிகழ்வுகள் இயைபுடையனவா அன்றேல் இல்லையா என்பதை சான்றுக் கட்டளைச் சட்டத்தினது ஏற்பாடுகளுடனும் தீர்ப்புச் சட்டத்துடனும் தொடர்புறுத்தி ஆராய்க:

அ) ராஜாவினது இறப்புக்கு ஒரு வாரத்துக்கு முன்னர் அவனது வாகனச் சாரதியான சில்வா என்பவன் கத்தியொன்றினை விலைக்கு வாங்கியிருந்தான் என்பதுடன் அது தற்போது அவனது உடைமையில் காணப்படவுமில்லை.

ஆ) ராஜாவினைப் பிரிந்து வாழும் அவனது மனைவியான கமனி என்பவளை தான் சம்பவ தினத்தன்று கதிர்காமத்துக்கு அழைத்துச் சென்றிருந்ததாக சில்வா வாதிடுகின்றான்.

இ) சம்பவ தினத்தன்று தான் கதிர்காமத்திலிருந்ததை நிரூபிக்கும் விதத்தில் விருந்தினர் விடுதியினால் வழங்கப்பட்ட பற்றுச்சீட்டினை கமனி வைத்திருக்கின்றாள் எனினும் தொலைத்தொடர்புச் சான்றின்படி, அன்றைய தினம் கமனியின் கைத்தொலைபேசியானது கதிர்காமத்தில் ஒருபோதுமே பாவிக்கப்பட்டிருக்கவில்லை.

ஈ) ராஜாவின் இறப்பின் பின்னர், அவனுடைய காப்புறுதிப் பூட்கையிலிருந்து (insurance policy) ஒன்றரைக் கோடி ரூபாவினைக் கமனி பெற்றுள்ளாள். ஐந்து வருடங்களுக்கு முன்னர், கமனியினது முதலாவது கணவர் மர்மமான முறையில் அவனது நீச்சல் தாடகத்தில்

நீரில் மூழ்கி இறந்ததன் பின்னர் அவள் ஒரு கோடி ரூபாவினை காப்புறுதிப் பணமாகப் பெற்றிருந்தாள்.

2. ஜயசிறி என்பவன் கொள்ளைக்கும் கொலைக்குமாகக் குற்றஞ்சாட்டப் பட்டுள்ளான். முன்னதாக, தான் வீடொன்றைக் கொள்ளையிட்டதாகவும் அவ்வீட்டின் சொந்தக்காரரைக் கத்தியால் குத்தியதாகவும் ஒப்புக்கொண்டு நீதிவானிடம் ஜயசிறி கூற்றொன்றைச் செய்திருந்தான். கொலைக்குப் பாவிக்கப்பட்ட கத்தியினை தான் ஒளித்து வைத்த இடத்தினை, இக்கூற்றினைச் செய்கையில் ஜயசிறி வெளிப்படுத்தியிருந்தான். நீதிவானுக்கு ஜயசிறியினால் கொடுக்கப்பட்ட கூற்றையும் அந்தக் கத்தியினையும் சான்றாக முற்போட வழக்குத்தொடுநர் முயல்கின்றார். "*அந்த வீட்டுச் சொந்தக்காரரை கொலை செய்ததாக நீ ஒப்புக்கொள். உன்னைப் போக விடுகின்றோம்*" என்று பொலிஸ் அலுவலர்கள் தன்னிடம் கூறியதாக ஜயசிறி வாதிடுகின்றான். நீதவானால் தன்னுடைய கூற்று பதிவுசெய்யப்பட்டபோது பொலிஸ் அலுவலர்கள் தனது பக்கத்திலேயே நின்றிருந்ததாகவும் அவன் மேலும் கூறுகின்றான்.

வழக்குத்தொடுநர் தங்கியிருக்கும் சான்றினது அனுமதிக்கப்படு தன்மையினையும் ஜயசிறியினது எதிர்வாதத்தினையும், சான்றுக் கட்டளைச் சட்டத்தினது பொருத்தமான பிரிவுகளுடனும் தீர்ப்புச் சட்டத்துடனும் தொடர்புறுத்தி ஆராய்க.

3. பொருத்தமான தீர்ப்புச் சட்டத்துடனும் நியதிச்சட்ட அதிகார ஆதாரங்களுடனும் தொடர்புறுத்தி பின்வரும் கூற்றுக்கள் மீது கருத்துரைக்க:

அ) பயங்கரவாதத் தடைச் சட்டமானது, பொலிஸாரினால் பதிவுசெய்யப் படும் கூற்றுக்கள் சாராம்சமான சான்றாக நீதிமன்றில் அனுமதிக்கப்படு தன்மை தொடர்பான சட்டத்தில் பாரிய மாற்றங்களைச் அறிமுகப் படுத்தியுள்ளது.

ஆ) ஒப்புறுதிப்படுத்தல் தொடர்பான சட்டமானது ஒருசீர்த்தன்மையதாக அமையாததற்கான கார்ணம், ஒப்புறுதிப்படுத்தலுக்கான தேவைப்பாடா

நீரில் மூழ்கி இறந்ததன் பின்னர் அவள் ஒரு கோடி ரூபாவினை காப்புறுதிப் பணமாகப் பெற்றிருந்தாள்.

2. ஜயசிறி என்பவன் கொள்ளைக்கும் கொலைக்குமாகக் குற்றஞ்சாட்டப் பட்டுள்ளான். முன்னதாக, தான் வீடொன்றைக் கொள்ளையிட்டதாகவும் அவ்வீட்டின் சொந்தக்காரரைக் கத்தியால் குத்தியதாகவும் ஒப்புக்கொண்டு நீதிவானிடம் ஜயசிறி கூற்றொன்றைச் செய்திருந்தான். கொலைக்குப் பாவிக்கப்பட்ட கத்தியினை தான் ஒளித்து வைத்த இடத்தினை, இக்கூற்றினைச் செய்கையில் ஜயசிறி வெளிப்படுத்தியிருந்தான். நீதிவானுக்கு ஜயசிறியினால் கொடுக்கப்பட்ட கூற்றையும் அந்தக் கத்தியினையும் சான்றாக முற்போட வழக்குத்தொடுநர் முயல்கின்றார். "*அந்த வீட்டுச் சொந்தக்காரரை கொலை செய்ததாக நீ ஒப்புக்கொள். உன்னைப் போக விடுகின்றோம்*" என்று பொலிஸ் அலுவலர்கள் தன்னிடம் கூறியதாக ஜயசிறி வாதிடுகின்றான். நீதவானால் தன்னுடைய கூற்று பதிவுசெய்யப்பட்டபோது பொலிஸ் அலுவலர்கள் தனது பக்கத்திலேயே நின்றிருந்ததாகவும் அவன் மேலும் கூறுகின்றான்.

வழக்குத்தொடுநர் தங்கியிருக்கும் சான்றினது அனுமதிக்கப்படு தன்மையினையும் ஜயசிறியினது எதிர்வாதத்தினையும், சான்றுக் கட்டளைச் சட்டத்தினது பொருத்தமான பிரிவுகளுடனும் தீர்ப்புச் சட்டத்துடனும் தொடர்புறுத்தி ஆராய்க.

3. பொருத்தமான தீர்ப்புச் சட்டத்துடனும் நியதிச்சட்ட அதிகார ஆதாரங்களுடனும் தொடர்புறுத்தி பின்வரும் கூற்றுக்கள் மீது கருத்துரைக்க:

அ) பயங்கரவாதத் தடைச் சட்டமானது, பொலிஸாரினால் பதிவுசெய்யப் படும் கூற்றுக்கள் சாராம்சமான சான்றாக நீதிமன்றில் அனும்திக்கப்படு தன்மை தொடர்பான சட்டத்தில் பாரிய மாற்றங்களைச் அறிமுகப் படுத்தியுள்ளது.

ஆ) ஒப்புறுதிப்படுத்தல் தொடர்பான சட்டமானது ஒருசீர்த்தன்மையதாக அமையாததற்கான கார்ணம், ஒப்புறுதிப்படுத்தலுக்கான தேவைப்பாடா

னது குற்றங்களின் அல்லது சான்றின் தன்மையில் தங்கியுள்ளமையே எனலாம். உதாரணம்: பாலியற் குற்றங்கள், மறுத்துரைக்கப்படும் குற்றவொப்புதல்கள், ஒருசேரக் குற்றஞ்சாட்டப்பட்டவரின் (co-accused) சான்று அல்லது குற்ற உடந்தையாளன் ஒருவன் ஒரு சாட்சியாக வருதல்.

4. மவுடான் மற்றும் சத்துர என்பவர்களது இரட்டைக் கொலைக்காக குமார என்பவன் குற்றஞ் சாட்டப்படுகின்றான். குற்றம் நடந்த இடத்திலேயே உடனடியாகவே மவுடான் இறந்துவிட்டான் என்பதுடன் சத்துர மறுநாள் மருத்துவமனையில் இறந்தான். தனது இறப்புக்கு முன்னர் சத்துர பின்வரும் கூற்றினைப் பொலிஸுக்குக் கொடுத்தான்: *"குமார ஒரு வாளினால் மவுடானைத் தாக்கவே மவுடான் மயங்கி விழுந்துவிட்டான். நான் மவுடானைக் காப்பாற்றுவதற்காக அவனை நோக்கி ஓடினேன். ஆனால் குமார என்னை நோக்கித் திரும்பி வாளினால் என்னைக் குத்தினான்."*

சான்றுக் கட்டளைச் சட்டத்தினது ஏற்பாடுகளுடனும் தீர்ப்புச் சட்டத்துடனும் தொடர்புறுத்தி, சத்துரவினால் பொலிஸுக்குக் கொடுக்கப்பட்ட கூற்றின் அனுமதிக்கப்படுதன்மையினை ஆராய்க.

5. **அ** *அல்லது* **ஆ** வுக்கு <u>**மட்டும்**</u> விடை தருக:

**அ)** சான்றுக் கட்டளைச் சட்டத்தினது பொருத்தமான பிரிவுகளுடனும் தீர்ப்புச் சட்டத்துடனும் தொடர்புறுத்திப் பின்வருஞ் சந்தர்ப்பங்களை ஆராய்க:

i) டேவிட் என்பவன் 6 கிராம் ஹெரோயினைத் தனது உடைமையில் வைத்திருந்ததாகக் குற்றஞ்சாட்டப்படுகின்றான். விளக்கத்தின்போது, குற்றஞ்சாட்டப்பட்டவன் சம்பந்தப்பட்ட போதைவஸ்து கடத்தல் தொடர்பான முன்னைய இரு சம்பவங்கள் பற்றி வழக்குத்தொடுநர் அவனிடம் வினா எழுப்பினார். எதிர்த்தரப்பு இதற்கு ஆட்சேபனை தெரிவிக்காததுடன், போதைவஸ்து தொடர்பான முன்னைய சம்பவங்கள் பற்றிய சான்றும் வழக்குப் பதிவேட்டில் இடம்பெறுவதற்கு அனுமதிக்கப்பட்டது.

ii) ரேமண்ட என்பவன் கணணி வரைபடத் தொழில்நுட்பவியலாளன் ஒருவன் ஆவான். அவன் ஐந்து வருடங்களாக எகிப்தில், தொல்லியலாளர் மற்றும் சட்டமருத்துவ விஞ்ஞானிகள் கொண்ட குழு ஒன்றுடன், மனிதப் பேழைகள் புதைக்கப்பட்ட இடமொன்றில் காணப்பட்ட மனித உருக்களின் முகங்களை, கணணி மென்பொருளைப் பிரதானமாகப் பாவித்து மீளுருப்படுத்துவதில் பணியாற்றியிருந்தான். உருக்குலைந்த சடலம் ஒன்றினை, எகிப்தில் தான் பாவித்திருந்த கணணி மென்பொருளைப் பாவித்து, அதனது முகத்தினை வரைபட உதவியுடன் மீளுருப்படுத்தி அடையாளங் காண்பதில் ரேமண்ட் இலங்கையில் பொலிஸ் குழுவொன்றுக்கு உதவினான்.

<u>அல்லது</u>

ஆ) i) "வழக்குத்தொடுநர் மீதான எண்பிக்கும் பொறுப்பானது குற்றஞ் சாட்டப்பட்டவர் மீது ஒருபோதுமே மாற்றப்படாது என்பதுடன் தனது குற்றமற்ற தன்மையை நிறுவுதற்கான அல்லது தனது எதிர்வாதத்துக்கான சான்றினை முற்போடுதற்கான அல்லது ஏதேனும் கூற்றினைச் செய்வதற்கான கடப்பாடு எதனையும் அவன் கொண்டிருக்கவுமில்லை."

சான்றுக் கட்டளைச் சட்டத்தினது ஏற்பாடுகளுடனும் தீர்ப்புச் சட்டத்துடனும் தொடர்புறுத்தி மேற்போந்த கூற்றின் மீது கருத்துரைக்க.

ஆ) ii) சான்றுக் கட்டளைச் சட்டத்தின் 114 ஆவது பிரிவு ஏற்பாடு செய்வதாவது: "பொதுவான போக்கில் நிகழக் கூடிய விடயந் தொடர்பில் இயல்பான சம்பவங்கள், மனித நடத்தை, மற்றும் குறிப்பிட்ட விடயத்தின் நிகழ்வுகள் தொடர்பில் பொது அத்துடன் தனிப்பட்ட செயற்பாடுகளுக்கு இருக்கும் உறவு என்பவற்றைக் கவனத்தில் கொண்டு பார்க்கையில், நிகழ்ந்திருக்கக் கூடும் என்று